# மனிதன் இழந்து போகப்பட்டிருப்பது பற்றி தேவன் கவலைப்படுகின்றாரா?

*"நான் கர்த்தர், நான் மாறாதவர்" (மல். 3:6).* தேவன் ஒரு பொழுதும் மாறாதவராயிருக்கின்றதால், மனிதன் இழந்து போகப்பட்டிருத்தல் பற்றி தேவன் கவலைப்படுகின்றாரா இல்லையா என்று அறிவதற்கு, ஒருவர் கடந்த காலத்தை மட்டுமே நோக்கிப் பார்க்க வேண்டியதாயுள்ளது. அவர் *"நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய்" (எபி. 13:8)* இருப்பதால், அவரது அக்கறையைப் பற்றி கடந்த காலத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ளவைகள் இன்று வேறு விதமாய் இருக்க முடியாது.

## காயீனிடத்தில் அவரது அக்கறை

கடந்த காலத்தை நோக்கிப் பார்க்கும் ஒருவர், இந்த அண்டத்தின் பாதுகாப்பாளராயிருப்பவர் ஒரு மனிதனிடத்தில் பேசுவதற்கு நேரம் எடுத்துக் கொண்டதைக் காண்கின்றார்: அவன் பாவம் நிறைந்தவனாக, பிணங்குபவனாக, அவமதிப்படைந்தவனாக மற்றும் கோபம் கொண்டவனாக இருந்தான், அவன் பெயர் காயீன். காயீனுக்குச் சரியானதைச் செய்ய, *"நன்மை" (ஆதி. 4:7)* செய்ய வாய்ப்புத் தரப்பட்டிருந்தது; ஆனால் அவன் சரியற்றதைச் செய்வதை, தீமையைச் செய்வதைத் தேர்ந்து கொண்டான். வேலை நிறைய உள்ள தேவன் பரலோகத்திலேயே இருந்து கொண்டு, கீழ்ப்படியாமற் போன காயீனைக் கண்டு கொள்ளாமல் விட்டிருந்தால் அது அவருக்கு நியாயமானதாகவே இருந்திருக்கும்; ஆனால், பாவம் நிறைந்த ஆத்துமா ஒன்றின் மேல் அவர் கொண்ட அக்கறையானது தேவனை ஒரு நபரிடம், தனிநபர் ஊழியம் செய்வதற்காகப் பரலோகத்திலிருந்து கீழே கொண்டு வந்தது.

தேவன் காயீனை காக்க/இரட்சிக்க முயற்சி செய்தார். அவர் அவனுடன் வாதிட்டு, மனிதன் பாவத்தின் மீது ஆளுகை செய்து கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படுவது சாத்தியமே என்று அவனுக்குக் காண்பித்தார் (ஆதி. 4:7). தேவனுடைய விவாதத் தொடக்கத்திற்குக் காயீன் தக்க வகையில் பதில்

அளிக்கத் தவறியது அவரது அக்கறையை எவ்விதத்திலும் குறைத்து விடவில்லை. காயீன் பொல்லாங்கைத் தேர்ந்தெடுத்ததால் நல்ல கர்த்தர் மனம் புண்பட்டார்.

## நோவாவின் சமகாலத்தவர்கள் மீது அவரது அக்கறை

நோவாவின் நாட்களில், மனிதர்கள் தங்களைக் காம விகாரத்திற்கு ஒப்புக் கொடுத்து, "தாங்கள் தெரிந்து கொண்டவர்களைத் தங்களுக்கு மனைவிகளாக ஆக்கிக்கொண்டனர்" (ஆதி. 6:2), சுத்தமும் அன்பும் உள்ள தேவன் ஆழமாகப் பாதிக்கப்பட்டார். "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத் துக்கு விசனமாயிருந்தது'' (ஆதி. 6:6). ஒரு தவறின் காரணத்தினால் மனமாற்றம் ஏற்பட்டது என்ற கருத்தில், மனந்திரும்புதல் என்பது தேவனுக்கு இயலாததாக உள்ளது (1 சாமு. 15:29). இருப்பினும் மனிதனின் தவறான நடக்கையினால் வேதனை மற்றும் துக்க உணர்வு எழுந்தது என்ற கருத்தில், தேவன் மனந்திரும்பினார் (எபி.: naham; 1 சாமு. 15:11, 35; நியா. 2:18; எரே. 42:10) மற்றும் தொடர்ந்து மனந்திரும்புதலைக் காத்துக் கொண்டுள்ளார் (வெளி. 3:20).

மனிதர்களின் மீதான தேவனுடைய மென்மையான பாச உணர் வானது, அவர் பாவத்தைக் காணாதவாறு விட்டு விடுவதற்கோ அல்லது தண்டனையை நிறுத்தி விடுவதற்கோ அவரை ஒருக்காலும் வழிநடத்திய தில்லை. நோவாவின் சமகாலத்தியவர்கள், 120 வருட காலமாக நோவாவின் பிரசங்கத்தின் மூலமாக தேவனுடைய வேண்டுகோளைக் கேட்ட பின்னர், தேவனுடைய கோபக்கினையை அனுபவித்து, மூழ்கிப்போயினர். அவர்களுடைய அழிவு என்பது தேவனுடைய விருப்பமாய் இருந்ததில்லை; பாவிகள் தங்களைத் தண்டிக்கும்படி அவரை வலியுறுத்தினர்.

## மோவாபின் மீது அவரது அக்கறை

லோத்தின் பின் சந்ததியாரான மோவாபியர்கள், வேசித் தனம் பண்ணி, விக்கிரகங்களுக்குப் பலி செலுத்தினர், ஆயினும் தேவன் அவர்களிடத்தில் அன்புகூர்ந்தார்; அவர்கள்மீது அவர் கொண்ட அக்கறை ஆழமாயிருந்தது. ''என் இருதயம் மோவாபினிமித்தம் ஓலமிடுகிறது'' என்றார் அவர் (ஏசா. 15:5). ''ஆகையால் மோவாபினிமித்தம் என் குடல்களும், கிராரேசினிமித்தம் என் உள்ளமும் சுரமண்டலத்தைப் போலத் தொனிக்கிறது" (ஏசா. 16:11). மோவாபியர்கள் நீதியை விட்டு வெகு தூரம் விலகிச் சென்றிருந்தாலும் (எண். 25:1-5ஐக் காணவும்), தேவனுடைய கவனிப்பை விட்டு விலகிச் செல்வது அவர்களுக்கு இயலாததாய் இருந்தது.

## நினிவேயின் மீது அவரது அக்கறை

அது போலவே, நினிவே என்ற மாநகரில் வாழ்ந்த அசீரியர்கள் நீதியை விட்டு விலகிச் சென்றிருந்தனர். ("அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது" என்று கர்த்தர் சொன்னார்; யோனா 1:2.) மென்மையான மற்றும் ஏக்கம் நிறைந்த இருதயத்துடன் தேவன் மனிதர்களின் நன்மைக்காக ஓயாமல் பெரும் முயற்சி எடுக்கின்றார். நினிவேயின் நடத்தையில் ஒரு மாற்றத்தைச் செயல் விளவு படுத்துவதற்காக அவர் திறமைமிக்க ஒரு ஆத்துமா - ஆதாயக்காரரை அனுப்பினார். யோனா கடைசியாக அங்கு சென்ற பொழுது திறமை நிறைந்த பணியொன்றை நிறைவேற்றினார், மற்றும் அந்த நகரம் முழுவதும் மனந்திரும்புதலுக்குத் திரும்பிய பொழுது தேவனுடைய இருதயம் அகம் மகிழ்ந்தது.

யோனா இழந்து போகப்பட்டிருந்தவர்கள் மீது தமக்குள்ளே சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருக்கவில்லை. இழந்து போகப்பட்டிருந்த மக்கள்மீது தேவன் கொண்டிருந்த அதே விதமான அன்பை அவர் (யோனா) கொண்டிருக்கவில்லை. அழிவுக்குட்படும் மக்கள் மீது "வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத" (யோனா 4:11) சிறு மக்கள் மீது ஒருவர் அக்கறையாயிருக்கவேண்டும் என்று தேவன் அவருக்குக் காண்பிக்க விரும்பினார்.

## கீழ்ப்படியாமையுள்ள இஸ்ரவேலர் மீது அவரது அக்கறை

ஆபிரகாமின் பின் சந்ததியினர் எகிப்தில் கடுமையான ஆளோட்டிகளின் கீழ் மிகவும் கடுமையான அடிமைத்தனத்தின் கீழ் இருந்ததைக் கண்டபொழுது, பரலோகத்தின் தேவன் வேதனைப்பட்டார். அவர் பின்வருமாறு கூறினார்:

> எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன் (யாத். 3:7).

அவர்களுடைய விடுதலையை அவர் செயல்விளவு படுத்திய பிறகு அதைப்பற்றிக் கூறுவதற்கு அவர் அகம் மகிழ்ந்தார்:

> இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் ... மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங் கொடுத்தேன் (ஓசி. 11:1-4).

ஆர்வங்கொண்ட அவருடைய இருதயமானது, தம்முடைய இரக்கங்

களை இஸ்ரவேலர் மதிக்க மாட்டார்கள் என்பதை முன் எதிர்பார்த்தது, மற்றும் இந்த உண்மையானது தேவனை ஆழமாகப் பாதித்தது:

> அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும் (உபா. 5:29).

அவர்கள் பிசாசுக்கு ஊழியம் செய்து, அக்கிரமத்தில் வாழ்ந்தபொழுது, தேவன் இன்னமும் பராமரித்தார். அவர்களிடம் அவர் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தார்:

> நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாக வேண்டும்? (எசே. 33:11).

பரலோகத்தின் தேவன் பொல்லாங்குடன் உடன்பாடு எதுவும் செய்து கொள்ள முடியாதிருந்தது. அவர் தம்முடைய பிள்ளைகளை மீண்டும் மீண்டும் கடிந்து கொள்ள வேண்டியிருந்தது, ஆனால் அது அவர்களுக்குச் செய்ததைக் காட்டிலும் அதிகமாக அவரைப் புண்படுத்திற்று.

> எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினதுமுதல் அவனை நினைத்துக் கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31:20).

தேவனுடைய ஆழமான பாச உணர்வானது ஒரு தாயின் அன்பைக் காட்டிலும் மேலானதாக ஆகின்றது:

> ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என் முன் இருக்கிறது (ஏசா. 49:15, 16).

கீழ்ப்படியாமையில் இருந்த இஸ்ரவேலர்களை அவர் தண்டிக்க வேண்டியிருந்தபொழுது, அது அவருக்கு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருந்ததில்லை: "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்" (ஏசா. 63:9அ). அவர்களின் தவறான செயலுக்காக அவர் வருத்தப்பட்டார்; ஆனால் அவர் தம்முடைய பரிசுத்தத்தில் அவர்களுக்குத் துன்பத்தைத் தர வேண்டியிருந்தது: "அவர்களோ கலகம் பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்

பண்ணினார்" (ஏசா. 63:10).

துவக்கத்திலிருந்தே முடிவைக் காணக்கூடிய ஒருவர், தம்முடைய மக்கள் மனந்திரும்புவார்கள் என்பதை அறிந்திருந்தார், மற்றும் அவர் தம்முடைய மகா பெரிய அன்பில் கிறிஸ்தவத்திற்கான முன் திட்டத்தை வடிவமைத்தார். கிறிஸ்தவர்களாயிருப்பதன் உயர்ந்த மதிப்பீட்டை, இராஜ்யத்தில் இருத்தலின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மையை கண்கள் கண்டதில்லை, செவிகள் கேட்டதில்லை: "தேவனே, உமக்குக் காத்திருக்கிற வர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத் தோற்றம் முதற் கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" (ஏசா. 64:4). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவருடைய இராஜ்யத்தில், இழந்து போகப்பட்டவர்களுக்காக தேவனுடைய அக்கறையானது உச்சகட்டத்திற்கு வரும்.

## இன்றைய நாளில் பாவிகளின் மீதான அவரது அக்கறை

தகப்பனுடைய அன்பானது மோவாபியர்கள், நினிவே நகரத்தார், மற்றும் இஸ்ரவேலர்களுக்கு மட்டுமின்றி, எல்லா நாட்டவருக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. உலகம் முழுவதிலும் உள்ளவர்களின் பாவங்களுக்குக் கிருபாதார பலியாக அவருடைய குமாரன் அனுப்பப்பட்டார் (1 யோவா. 2:2). ஒருவராகிலும் இழந்துப் போகப்படக்கூடாதென்பதே அவருடைய நிலையான அக்கறையாக உள்ளது.

2 பேதுரு 3:9ல் நாம், "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று வாசிக்கின்றோம். இந்த சத்தியங்களை அறிகின்ற பாவி ஒவ்வொருவரும் அன்பில் அவருக்குப் பதில்செயல் செய்யவேண்டியவராய் உள்ளார், ஏனெனில் தேவன் முந்தி நம்மேல் அன்புகூர்ந்தார் (1 யோவா. 4:19).